# EVERWIN MATRIC. HR. SEC.SCHOOL

# தமிழ்

STD:VI

## Tamil-I FA-III

இயல் – I

செய்யுள்

பாரதம் அன்றைய நாற்றங்கால்

I. பொருள் கூறுக:

1. மெய் - உண்மை
2. தேசம் - நாடு
3. புன்னகை - சிரிப்பு
4. நதி - ஆறு

II. பிரித்து எழுதுக:

1. கிழக்குக்கரை - கிழக்கு + கரை
2. கலைக் கூடம் - கலை + கூடம்
3. பொற்காலம் - பொன் + காலம்
4. கைத்தடி - கை + தடி

III. சேர்த்து எழுதுக:

1. புல் + வெளி - புல்வெளி
2. பூ + தொடுக்கும் - பூத்தொடுக்கும்
3. மேற்கு + மலைகள் - மேற்குமலைகள்
4. அமுதம் + சுரபி - அமுதசுரபி

IV. எதிர்ச்சொல்:

1. புதுமை X பழமை
2. ஒற்றுமை X வேற்றுமை
3. கிழக்கு X மேற்கு
4. இயற்கை வளம் X செயற்கைவளம்

V. குறுவினாக்கள்:

1. தாராபாரதியின் பாடலில் இடம் பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக:

* திருவள்ளுவர் *கம்பன்* காளிதாசன்

2. இந்தியாவின் மேற்கு, கிழக்கு ஆகிய திசைகளை இணைத்துக் கவிஞர் காட்டும் காட்சியை எழுதுக:

*மேற்கு மலைகள் நதிகளை அனுப்பிக் கிழக்குக் கரையின் நலம் கேட்கும் இவையே கவிஞர் காட்டும் காட்சி ஆகும்.

VI. சிறுவைனா:

1. தாராபாரதி பாடலின் கருத்தைச் சுருக்கி எழுதுக:

* பூமியின் கிழக்கு வாசலாகத் திகழும் நமது இந்திய நாடு பல புதுமைகளைச் செய்த நாடு. திருக்குறள் நாட்டின் ஆடையாகவும், உண்மை இந்திய தாய்க்கு மேலாடையாகவும் விளங்குகிறது.

* கம்பரின் கவிதை கங்கையின் இசையாகும்

* மேற்கு தோன்றும் நதிகள் கிழக்கு எல்லை வரை பாய்ந்து நன்மைகளை விளைவிக்கின்றன.

VII. பெருவினா:

1. நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு மாணவர்கள் செய்ய வேண்டியவை பற்றிச் சிந்தித்து எழுதுக:

*நமது நாடு வளம் பொருந்திய நாடு

*இயற்கை வளங்கள் மட்டுமின்றி இலக்கிய வளங்களும் மிகுந்துள்ளன.

* இமயம் முதல் குமரி வரை வாழும் இந்தியர்கள் அனை வரும் உணவு, உடை, மொழி, நாகரிகம் ஆகியவற்றால் வேறுபட்டு இருந்தாலும் உணர்வால் ஒன்றுபட்டவர்கள். எனவே நம் நாடு

முன்னேறுவதற்கு மாணவர்கள் அனைவரும் வேற்றுமையைத் தகர்த்தெறிந்து ஒற்றுமையை

போற்றி வாழ்தலே சிறப்பாகும்.

உரைநடை

தமிழ்நாட்டில் காந்தி

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

புத்தகப் பயிற்சி எண் (8) (1-2)

3. ஆங்கில அரசு ______ என்னும் கடுமையான சட்டத்தை நடைமுறைப்படுத்தியது.

அ. ரௌலட் சட்டம் ஆ. வெள்ளையனே வெளியேறு

இ. சிப்பாய்கலகம் ஈ. ஜாலியன் வாலாபாக்

4. காந்தியடிகளை கவர்ந்த நூல் ______.

அ. சிலப்பதிகாரம் ஆ. திருக்குறள்

இ. மணிமேகலை ஈ. வளையாபதி

II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

1. காந்தியடிகளின் கருத்தாய்வுக் கூட்டம் இராஜாஜி வீட்டில் நடைப்பெற்றது.
2. காந்தியடிகள் 1921 ஆம் ஆண்டு தமிழ் நாட்டிற்குவந்தார்.
3. காந்தியடிகள் தம் வாழ்நாள் முழுவதும் எளிமைத் திருக்கோலம் அணிந்திருந்தார்.
4. ஏற்றத்தாழ்வு அற்ற சமுதாயம் மலர வேண்டும் என்று காந்தியடிகள் உறுதி கொண்டார்.

III. வாக்கியத்தில் அமைத்து எழுதுக:

1. ஆலோசனை: என் ஆசிரியர் எனக்கு தகுந்த ஆலோசனை வழங்கினார்.
2. பாதுகாக்க: நாம் இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டும்.
3. மாற்றம்: நம் கல்வி அமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.
4. ஆடம்பரம்: காந்தியடிகள் ஆடம்பரம் இல்லாமல் வாழ்ந்தார்.

IV. பொருத்துக:

Pg no: 8 ( 1-4)

V. குறுவினாக்கள்:

1. காந்தியடிகள் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் முதலில் ஏன் நுழையவில்லை ?

விடை: மக்கள் சிலருக்கு கோவிலுக்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டதால் காந்தியடிகள் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் முதலில் நுழையவில்லை.

2. காந்தியடிகளுக்குத் தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்திய நிகழ்வைக் கூறுக?

விடை: இலக்கிய மாநாட்டில் உ.வே.சாமிநாதர் ஆற்றிய உரை காந்தியடிகளுக்குத் தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்தியது.

VI. சிறுவினா:

1. காந்தியடிகளின் உடை மாற்றத்திற்குக் காரணமாக அமைந்த நிகழ்வினை எழுதுக?

* காந்தியடிகள் மதுரைக்கு செல்லும் வழியில் பெரும்பாலான மக்கள் இடுப்பில் ஒரு துண்டு மட்டும் அணிந்து இருப்பதைக் கண்டார்.

* இந்தியர்கள் போதிய உடைகள் இல்லாமல் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்தார்.

* இந்நிகழ்வே காந்தியடிகளின் உடை மாற்றத்திற்குக் காரணமாக அமைந்தது.

2. காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை எழுதுக?

* காந்தியடிகளுக்கு ஜி .யு.போப் எழுதிய தமிழ்க்கையேடும், திருக்குறளும் பிடித்த நூல் ஆகும்.

*இலக்கிய மாநாட்டில் உ.வே. சாமிநாதர் ஆற்றிய உரை காந்தியடிகளுக்கு தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்தியது.

* இதுவே காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு ஆகும்.

VII. பெருவினா:
1. காந்தியடிகளிடம் காணப்படும் உயர்ந்த பண்புகள் யாவை?
* மக்களின் உடைகள் போதிய அளவில் இல்லாமல் இருப்பதைக் கண்டு தன்னுடைய உடையை மாற்றி எளிமை திருக்கோலம் பூண்டார்.
* மனிதர்களிடம் உயர்வு தாழ்வு பாராட்டக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்.
* தமிழ் நாட்டுக் கவிஞர் பாரதியாரை பாதுகாக்க வேண்டும் என்று பெருமதிப்பு கொண்டார்.
* வெளிநாட்டு பொருள்கள் வாங்கக் கூடாது என்று மனவுறுதியுடன் வாழ்ந்தார்.
* தமிழ்நாட்டின் மீதும் தமிழ் மக்கள் மீதும் மிகுந்த அன்பு கொண்டார்.
* இதுவே காந்தியடிகளிடம் காணப்படும் உயர்ந்த பண்புகள் ஆகும்.

3. அணி இலக்கணம்

1. அணி இலக்கணம் என்றால் என்ன?
கவிஞர்கள் தங்கள் கற்பனைத் திறத்தாலும் புலமையாலும் தாங்கள் இயற்றும் பாடல்களில் அழகை சேர்க்கைன்றனர். இதனை விளக்குவது அணி இலக்கணமாகும்.
2. உள்ளதை உள்ளவாறு கூறும் அணியின் பெயர் யாது
உள்ளதை உள்ளவாறு கூறும் அணியின் பெயர். இயல்பு நவிற்சி அணி.
3. இயல்பு நவிற்சி அணிக்கு மற்றொரு பெயர் என்ன?
இயல்பு நவிற்சி அணிக்கு மற்றொரு பெயர் தன்மை நவிற்சி அணி.
4. உயர்வு நவிற்சி அணி என்பது யாது?
ஒரு பொருளின் இயல்பை மிகைப்படுத்தி அழகுடன் கூறுவது உயர்வு நவிற்சி அணி ஆகும்.

இலக்கணம்.
நால் வகைச் சொற்கள்

1. சொல் என்றால் என்ன?
ஓர் எழுத்து தனித்து நின்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து வந்து பொருள் தருமாயின் அது சொல் எனப்படும்.
2. சொற்களின் வகைகளை எழுதுக.
1. சொற்கள் 4 வகைப்படும். அவை 1. பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச் சொல், உரிச் சொல்.
3. பெயரையும் வினையையும் சார்ந்து வரும் சொற்களை எவ்வாறு வழங்குகிறோம்? சான்றுதருக.
பெயரையும் வினையையும் சார்ந்து வரும் சொற்களை இடைச்சொல் என்கிறோம். இது தனித்து இயங்காது.
எ.கா: ஐ – திருக்குறளை
மற்று – மற்றொருவர்
உம் – தந்தையும் தாயும்

2. பெயர்ச் சொயல்

1. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
பெயர்ச் சொல் ஆறு வகைப்படும். அவை 1. பொருட் பெயர் 2. இடப்பெயர் 3. காலப்பெயர் 4. சினைப்பெயர் 5. பண்புப் பெயர் 6. தொழிற்பெயர்.
2. இடுகுறிப் பெயர் என்றால் என்ன? சான்றுதருக. அவை எத்தனை வகைப்படும்?
நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணம் கருதாமல் பெயரிட்டு வழங்கிய பெயர்கள் இடுகுறிப் பெயர்கள்.
சான்று: மண், மரம், காற்று.
அவை இரண்டு வகைப்படும். இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப்பெயர்.
3. காரணப்பெயர் என்றால் என்ன்? சான்று தருக.
நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணத்தோடு வழங்கும் பெயர் காரணப்பெயர் எனப்படும்.
எ.கா. நாற்காலி, கரும் பலகை.
4. காரணப் பெயர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
காரணப் பெயர் இரண்டு வகைப்படும் . அவை காரணப் பொதுப் பெயர், காரண சிறப்பு பெயர்.

செய்யுள்
பராபரக் கண்ணி

I. பொருள் கூறுக:
1. பராபரமே - மேலான பொருளே
2. கூர் - மிகுதி
3. எய்தும் - கிடைக்கும்
4. அல்லாமல் - அதைத்தவிர
II. பிரித்து எழுதுக:
1. தானென்று - தான் + என்று
2. இன்ப நிலை - இன்பம் + நிலை
3. நினைப்பதுவே - நினைப்பது + அதுவே
4. வேறொன்று - வேறு + ஒன்று
III. சேர்த்து எழுதுக:
1. தம் + உயிர் - தம்முயிர்
2. இன்புற்று + இருக்க - இன்புற்றிருக்க
3. எ + உயிரும் - எவ்வுயிரும்
4. கடை + பிடித்து - கடைப்பிடித்து
IV. எதிர்ச்சொல் தருக:
1. மிகுதி x மிகுதியின்மை
2. சோம்பல் x சுறுசுறுப்பு
3. இன்பம் x துன்பம்
4. அறிவுடைமை x அறியாமை
V.குறுவினா:
1. யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும்?
அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் சான்றோக்குத் தொண்டு செய்ய வேண்டும்.
2. இன்பநிலை எப்போது வந்து சேரும்?
அன்பர்களுக்குத் தொண்டு செய்பவராக மாறிவிட்டால் இன்பநிலை தானே வந்து சேரும்.
IV. சிறுவினா:
1. பராபரக் கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை
* அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் சான்றோர்க்குத் தொண்டு செய்ய வேண்டும்.
* அத்தகைய பேறு கிடைத்தால் இன்பநிலை தானே வந்து சேரும்.
* எல்லோரும் இன்பமாக வாழ வேண்டும் என்பதை தவிர வேறு எதை யும் நினைக்க மாட்டேன்.
என்பன பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறும் கருத்துகள் ஆகும்.

செய்யுள்
இயல் இரண்டு – நீங்கள் நல்லவர்

I. பொருள் கூறுக:
1. சுயம் - தனித்தன்மை
2. உள்ளிடுகள் - உள்ளே இருப்பவை
3. இலக்கு - குறிக்கோள்
4. சக்தி - ஆற்றல்
II. பிரித்து எழுதுக:
1. விழிப்புணர்ச்சி - விழிப்பு + உணர்ச்சி

2. புவியரசு - புவி + அரசு
3. கட்டுரையாசிரியர் - கட்டுரை + ஆசிரிசியர்
4. உள்ளீடுகள் - உள் + ஈடுகள்

III. சேர்த்து எழுதுக:
1. அயல் + நாடு - அயல்நாடு
2. அறம் + வழி - அறவழி
3. மனம் + நிலை - மனநிலை
4. உலகு + எங்கும் - உலகெங்கும்

IV. எதிர்ச் சொல் தருக:
1. உள்நாடு x அயல் நாடு
2. நன்மை x தீமை
3. உழைப்பு x உழைப்பின்மை
4. உள்ளீடு x வெளியீடு

V.குறுவினா:
1.பழம், வேர் ஆகியவற்றின் இயல்புகள் யாவை?
* கொடுப்பது பழத்தின் இயல்பு
* பெறுவது வேரின் இயல்பு
இவை பழம், வேர் ஆகியவற்றின் இயல்புகள் ஆகும்.
2. உழைக்கும் போது என்னவாக ஆகிறோம்?
உழைக்கும் போது நாம் புல்லாங்குழல் ஆகிவிடுகிறோம்.

VI. சிறுவினா:
1. நீங்கள் நல்லவர் என்னும் இப்பாடல் விளக்கும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக?
* உழைக்கும் போது நாம் புல்லாங்குழலாகவும் ,
* சுயத்துடன் இல்லாமல் ஒருமைப்பாட்டுடனும் ,
* பேச்சில் விழிப்புணர்ச்சியுடனும் ,
குறிக்கோளை நோக்கி உறுதியாக கால்பதித்து நடக்க வேண்டும் எனவும் இப்பாடல் கூறுகிறது.

## செய்யுள்
## திருக்குறள்

I. பொருள் கூறுக:
1. மாசிலன் - குற்றம் இல்லாமல்
2. வெகுளி - சினம்
3. ஈவது - தருவது, கொடுப்பது
4. அழுக்காறு - பொறாமை

II. பிரித்து எழுதுக:
1. பகுத்துண்டும் - பகுத்து + உண்டு
2. கடுஞ்சொல் - கடுமை + சொல்
3. மாசிலன் - மாசு + இலன்
4. பல்லுயிர் - பன்மை + உயிர்

III. சேர்த்து எழுதுக:
1. தீங்கில் + இருந்து - தீங்கிலிருந்து
2. பிழைத்து + கொள்ள - பிழைத்துக்கொள்ள
3. அறம் + நூல்கள் - அறநூல்கள்
4. நிறை + மதி - நிறைமதி

IV. எதிர்ச்சொல் தருக:
1. இன்சொல் x வன்சொல்
2. சிறியவர் x பெரியவர்
3. ஆற்றுவார் x ஆற்றார்
4. புகழாமை x இகழாமை

V. குறுவினாக்கள்:
1. அறிவின் பயன் யாது?
பிற உயிரின் துன்பத்தை தமது துன்பம் போல் கருதுவதே அறிவின் பயன் ஆகும்.
2. பிற உயிர்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும்?
தம்மிடம் இருப்பவற்றைப் பிற உயிர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துக் காப்பாற்ற வேண்டும்.
3. ஈகை பற்றிய வள்ளுவரின் கருத்து யாது?
* இல்லாதவர்களுக்கு தருவதே ஈகை ஆகும்.
* இல்லாதவர்களுக்கு தருவதால் இன்பம் மட்டுமே உண்டாகும்.
இவையே ஈகை என்று வள்ளுவர் கூறுகிறார்

VI. சிறுவினா:
1. “ அறன் வலியுறுத்தல்” பற்றி வள்ளுவர் கூறுவன யாவை?
* உள்ளத்தில் குற்றல் இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும்.
* பொறாமை, பேராசை ஆகிய நான்கும் இல்லாமல் வாழ்வதே சிறந்த அறமாகும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

## உரை நடை
## பசிப்பிணி போக்கிய பாவை – இயல் - II

I. கோடிட்ட இடத்தை நிரப்புக:
1. மணிமேகலை <u>பூம்புகார்</u> நகரைச் சேர்ந்தவள்
2. <u>உணவே</u> உயிர்களுக்கு ஆதாரமாக விளங்குகிறது.
3. <u>மணிமேகலை</u> மணிபல்லவத்தீவில் அமுதசுரபி பெற்றாள்
4. உணவு கொடுத்தவர் <u>உயிர்</u> கொடுத்தவர் ஆவார்.
5. <u>சிறைக்கோட்டம்</u> அறக்கோட்டமாக மாறவேண்டும்

II. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக:
(1). (2) Pg no: 27.
3. அமுத சுரபி தோன்றும் திங்கள் <u>வைகாசி</u>
அ. ஆணி ஆ. புரட்டாசி இ. வைகாசி
4. பூக்கள் நிறைந்த பொய்கை <u>கோமுகி</u>
அ. சூரியமுகி ஆ. சந்திரமுகி இ. கோமுகி
5. மணிமேகலையிடம் உரையாடியவர் <u>தீவதிலகை</u>

III. பொருத்துக:
1. கோமுகி - பொய்கை
2. மணிமேகலை - மாதவி மகள்
3. அமுதசுரபி - அரிய வகை பாத்திரம்
4. மணிமேகலா - தெய்வம்
5. தீவதிலகை - புத்தபீடிகை

IV. வாக்கியத்தில் அமைத்து எழுதுக:
1. செடிகொடிகள்: பூங்காவில் செடிகொடிகள் வளர்ந்திருந்தன.
2. முழுநிலவு நாள்: வைகாசித் திங்களில் முழுநிலவு நாளில் அமுத சுரபி தோன்றும்.
3. அமுத சுரபி: அள்ள அள்ள குறையாமல் உணவு வழங்குவது அமுத சுரபி ஆகும்.
4. நல்லறம்: பசித்திருப்பவருக்கு உணவு இடுவதே நல்லறம்.

V. குறுவினா:
1. அமுத சுரபியின் சிறப்பு யாது?
* அள்ள அள்ளக் குறையாமல் உணவு வழங்கும்.
* பசியுற்றோரின் பசியைப் போக்கும்.
2. மணிமேகலை மன்னரிடம் வேண்டியது யாது?
* சிறைச்சாலையில் தண்டனை பெற்றுள்ளவர்கள் திருந்தி வாழ வழிகாண வேண்டும்.

* சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக மாற வேண்டுமென மணிமேகலை மன்னரிடம் வேண்டினாள்.

VI. சிறுவினா:

1. மணிபல்லவத்தீவு எவ்வாறு காட்சி அளித்தது?

* மணிபல்லவத்தீவில் வெண்மணல் குன்றுகள், பூத்துக் குலுங்கும் செடிகொடிகள் அடர்ந்த மரங்கள் அம்மரங்களிடையே பொய்கைகளும் மனதை மயக்கும் காட்சிகளாகும்.

2. கோமுகி என்பதன் பொருள் யாது?

* 'கோ' என்பதன் பொருள் பசு. முகி என்றால் முகம். பசுவின் முகம் போன்று அமைந்து இருப்பதால் பொய்கையின் பெயர் கோமுகி ஆகும்.

* பூக்கள் நிறைந்து விளங்கும் இந்தப் பொய்கையின் பெயர் கோமுகி ஆகும்.

VII. பெருவினா:

1. அறச்செயல்கள் என்று எவற்றை எல்லாம் கருதலாம்?

* ஏழை மக்களின் பசிப்பிணியைப் போக்குவது

* உடல் குறையுற்றோர், பிணியாளர், ஆதரவு அற்றோர், சிறைத்தண்டணைக்கைதிகள் போன்ற அனைவருக்கும் உணவு அளிப்பது.

* சிறைச்சாலையில் தண்டனை பெற்றுள்ளவர்கள் திருந்தி வாழவழிகாண செய்தல்.

* சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக மாற செய்தல்.

* ' தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில் இச்செகத்தினை அழித்திடுவோம்' என்ற பாரதியார் கூற்றிற்கு ஏற்ப வாழ்தலும் அனைவருக்கும் உணவு அளித்தலும் சிறந்த அறங்களாகும்.

பாதம் – துணைப்பாடம் – இயல் – II

1. பாதம் கதையைச் சுருக்கி எழுதுக:

* வறுமையில் வாழ்ந்த மாரி என்பவர் செருப்பு தைக்கும் ஒரு தொழிலாளி.

* அப்போது ஒரு சிறுமி மீனைப்போன்று அவர் அருகில் வந்து தனது இடக்கையில் உள்ள காலணி ஒன்றைத் தைத்து வைக்கும் படி கூறிச்சென்றாள்.

* நாட்கள், மாதங்கள், வருடங்கள் உருண்டோடின. அச்சிறுமி வரவேயில்லை. இடைப்பட்ட காலத்தில் அக்காலணியை அணிந்து பார்க்க மாரியின் மனைவி ஆசைபட்டு எடுத்த போது, மாரி காலணியை வாங்கி கொண்டார். அப்போது அக்காலணி மனைவிக்குச் சரியாக பொருந்தியது.

* இவ்விந்தையான காலணி ஊர் மக்கள் அனைவருக்கும் பொருந்தவே, ஒரு கண்காட்சி போல அனைவரும் விந்தைக் காலணியைப் பார்க்க முன் வந்தனர். அதன் மூலம் அவர் செல்வந்தரும் ஆனார்.

* மாரியின் வாழ்வை உயர்த்திய அச்சிறுமியை காண ஆவலாக இருந்த போது, ஒரு நாள் அப்பெண் வந்து இடக்காலணியை வைத்து தன்னை நினைவு இருக்கிறதா? என்று கேட்டார். மாரி மகிழ்ச்சியாக வலக்காலணியை எடுத்து வைத்த போது அப்பெண்ணுக்கு பொருந்தவில்லை. சிறியதாக இருந்தது. " நீதி உண்மையுடனும் அடுத்தவர் பொருள் மீது ஆசைப்படாதவரும், ஏழ்மை நிலையிலிருந்து தம்மை உயர்த்திக் கொள்ள இயலும்".

தமிழாக்கம்

FA3

1. Care an diligence bring luch
ஊக்கமும் கவனமும் உயர்வும் தரும்.

2. Calm after the storm
புயலுக்குப் பின்னே அமைதி

3. Do well what you have to do
செய்வன திருந்தச் செய்

4. kindness cannot be bought.
அன்பை விலைக்கு வாங்க முடியாது.

5. Live not to eat; But eat to live.
உண்ணுவதற்காக வாழாதே, வாழ்வதற்காக உண்.

SA3

1. Measure is treasure
ஆற்றில் போட்டாலும், அளந்து போடு.

2. No smoke without fire.
நெருப்பில்லாமல் புகையாது

3. Practice makes one perfection.
சித்திரமும் கைப்பழக்கம்.

4. No advice like father's
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.

5. Something is better them nothing.
மனம் போல வாழ்வு.

வேலுநாச்சியார் (விரிவானம்) துணைப்பாடம்

1. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வைச் சுருக்கமாக எழுதுக.

1. * இராமநாதபுரத்தை ஆட்சி செய்த "செல்லமுத்து" மன்னரின் ஒரே மகள் வேலுநாச்சியார். இவர் தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு மற்றும் உருது ஆகிய மொழி களையும் சிறப்பாக கற்றவர், மற்றும் ஆயுதம் ஏந்திய முதல் வீரப்பெண்மணி ஆவார். சிலம்பம் குதிரை ஏற்றம், வாள்போர், வில் பயிற்சி ஆகிய வற்றையும் கற்றுத் தேர்ந்தவர்.

2. * சிவகங்கை மன்னர் "முத்து வடுக நாதரை" மணந்தார். மன்னர் ஆங்கிலப் படையுடன் போரிட்டு வீரமரணம் அடைந்தார். எனவே ஆங்கிலேரோடு போரிட்டு சிவகங்கையை மீட்க பெரிய மருது, சின்ன மருது மற்றும் குறுநில மன்னர்களின், உதவியை நாடினார். மற்றும் மைசூர் மன்னர் ஐதரலியிடம் இருந்து 5000 குதிரைப் படைவீரர்களையும் பெற்றார்.

3. * அனைவரின் உதவியுடன் ஆங்கிலேயரை எதிர்த்து காளையார் கோவிலையும், சிவகங்கையையும் மீட்டார். இவற்றொடு குயிலியின் தியாகமும் இணைந்ததால் வீர மங்கை எளிதில் வெற்றி கண்டார்.

ஆசிய ஜோதி

I. பொருள் கூறுக:

1. அஞ்சினர் - பயந்தனர்
2. பார் - உலகம்
3. முற்றும் - முழுவதும்
4. கும்பி - வயிறு
5. பூதலம் - பூமி

II. எதிர்ச்சொல் தருக:

1. நல்வினை X தீவினை
2. இரக்கம் X இரக்கமின்மை
3. எளிது X அரிது
4. நேர்மை X நேர்மையற்ற

III. பிரித்து எழுதுக:

1. நீள்வானம் - நீண்ட + வானம்
2. வாட்டுமுலகில் - வாட்டும் + உலகில்
3. எளிதாகும் - எளிது+ ஆகும்
4. பாலையெலாம் - பாலை+எல்லாம்

IV. சேர்தெழுதுக:

1. உயிர்கள்+இடத்து - உயிர்களிடத்து
2. பாலை+எல்லாம் - பாலையெல்லாம்
3. மலை+ எல்லாம் - மலையெல்லாம்

4. இனிமை+ உயிர் - இன்னுயிர்

V. குறுவினாக்கள்

1. அரசனாலும் செய்ய முடியாத செயல் எது?

இறந்த உடலுக்கு உயிர் கொடுத்து எழுப்புவது அரசனாலும் செய்ய முடியாத செயல் ஆகும்.

2. எறும்பு எதற்காகப் பாடுபடுகிறது?

எறும்பு உயிரைக் காத்துக் கொள்ளப் பாடுபடுகிறது.

3. ஒரு நாளும் விட்டுச் செல்லாதது எது?

ஒருவர் செய்த நன்மையும் தீமையும் ஒரு நாளும் விட்டுச் செல்லாதது ஆகும்.

4. உலகம் முழுமையையும் எப்போது ஆளமுடியும்?

நேர்மையான இரக்க மனம் கொண்டிருப்பவரால் மட்டுமே பரந்த இவ்வுலகம் முழுமையையும் ஆட்சி செய்ய முடியும்.

VI. சிறு வினா:

1. எல்லா உயிர்களும் மகிழ்வோடு வாழப் புத்தர்பிரான் கூறும் அறிவுரைகள் யாவை?

1.எல்லா உயிர்கள் மீதும் இரக்கம் கொள்பவரே நேர்மையான வாழ்வு வாழ்பவர்.

2. ஒருவர் செய்த நன்மையும் தீமையும் ஒரு நாளும் அவரை விட்டுச் செல்லாது. ஆகையால் தீய செயல்களைச் செய்யாதீர்கள்.

3. இந்த பூமியை மகிழ்ச்சியற்றதாக மாற்றிடும் எண்ணத்தை விட்டு விடுங்கள்.

## உரைநடை

## மனித நேயம்

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல் மனித நேயம்

அ. மனிதநேயம் ஆ. மனித உரிமை இ. மனித உணர்வு

2. தம் பொருளைக் கவர்ந்தவரிடமும் அன்பு காட்டியவர் வள்ளலார்.

அ. கோபம் ஆ. வெறுப்பு இ. அன்பு

3. அன்னை தெரசாவிற்கு அமைதிக்கான 'நோபல் பரிசு' கிடைத்தது

அ. பொருளாதாரம் ஆ. இயற்பியல் இ. அமைதி

4. கைலாஷ் சத்யார்த்தி தொடங்கிய இயக்கம் குழந்தைகளைப் பாதுகாப்போம்.

அ. குழந்தைகளைப் பதுகாப்போம் ஆ. குழந்தைகளை நேசிப்போம்
இ. குழந்தைகள் உதவி மையம்

5. இல்லாதவர்க்குக் கொடுத்து மகிழ்வதே ஈகை ஆகும்.

அ. வறுமை ஆ. ஈகை இ. பழமை

II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

1. எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துதல் மனிதநேயம் ஆகும்.

2. வள்ளலார் தம் பெருமுயற்சியால் வடலூரில் சத்திய தருமச்சாலையைத் தொடங்கினார்.

3. அன்னை தெரசாவிற்கு அடுத்து அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற இந்தியர் கைலாஷ் சத்யார்த்தி

4. குழந்தைகளைத் தொழிலாளர்களாக மாற்றுவது மனிதத் தன்மைக்கு எதிரான குற்றம்.

5. " வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்றவர் வள்ளலார்

III. பொருத்துக:

1. வள்ளலார் - பசிப்பிணி போக்கியவர்
2. கைலாஷ் சத்யார்த்தி - குழந்தைகள் உரிமைக்குப் பாடுபட்டவர்
3. அன்னை தெரசா - நோயாளிகளிடம் அன்பு காட்டியவர்
4. குழந்தைத் தொழிலாளர் - சட்ட விரோதம்
5. உலக அமைதி தினம் - செப்டம்பர் 21

IV. குறுவினாக்காள்:

1. யாரால் உலகம் இயங்கிக் கொண்டு இருக்கிறது?

மனிதநேயத்துடன் வாழ்பவர்களால் இவ்வுலகம் இயங்கிக் கொண்டு இருக்கிறது.

2. வள்ளலார் பசிப்பிணியை நீக்க என்ன செய்தார்?

வள்ளலார் பசிப்பிணியை நீக்க சத்திய தருமச்சாலையை நிறுவினார்.

3. அன்னை தெரசா கண்ணீர் விடக் காரணம் யாது?

சாலையோரத்தில் உறவினர்களால் கைவிடப்பட்ட தொழுநோயாளியைக் கண்டதால் வருந்தினார்.

V. சிறுவினா:

1. கைலாஷ் சத்யார்த்தி நோபல் பரிசு பெறத் தூண்டுகோலாக அமைந்த இளமைக்கால நிகழ்வு யாது?

* கைலாஷ் தினமும் பள்ளிக்கூடம் செல்லும் போது, சாலையோரத்தில் ஒரு சிறுவன் வேலை செய்வதை காண்பார். அவன் ஏன் பள்ளிக்கு வரவில்லை என்ற கேள்வி அவரை உறுத்தியது.

* பணம் இல்லாததால் வீட்டின் உணவுத் தேவையை நிறைவு செய்ய என்பதை அறிந்து வருந்தினர். அதனால் பிற்காலத்தில் " குழந்தைகளைப் பாதுகாப்போம்" என்னும் இயக்கத்தை தொடங்கி அதற்கான நோபல் பரிசையும் பெற்றார்.

VI. பெருவினா:

1. அன்னை தெரசாவின் மனித நேயம் பற்றிய நிகழ்வினை எழுதுக.

*அன்னை தெரசா சாலையோரத்தில் உறவினர்களால் கைவிடப்பட்ட தொழுநோயாளியைக் கண்டு வருந்தினார்.

* ஆயிரக்கணக்கான நோயாளிகள் உதவி செய்ய யாருமின்றி வாடுவதை அறிந்தார்.

* கருணை உள்ளம் கொண்ட அன்னை தெரசா அவர்களுக்கு தொண்டு செய்ய முடிவெடுத்தார்.

* தமது இறுதிக் காலம் வரை பிறருக்காகவே வாழ்ந்தார்.

## துணைப்பாடம் – முடிவில் ஒரு தொடக்கம்

உறுப்புதானத்தின் உயர்வினை உணர்த்தும் "முடிவில் ஒரு தொடக்கம்" என்ற கதையை விவரி.

* பெங்களூருவில் வாழ்ந்த ஒரு சிறுமி இதய நோயால் பாதிக்கப்பட்டிருந்தாள். இதயமாற்று அறுவைசிகிச்சை ஒன்றுதான் தீர்வு என்று மருத்துவர்கள் கூறியதைக் கேட்டு பெற்றோர் அதிர்ந்தனர்.

* அதே நேரம் திருக்கழுக்குன்றம் என்ற ஊரில் வாழ்ந்த ஷிதேந்திரன், தன் இருசக்கர வாகனத்தில் வரும் பொழுது, சரக்குந்து வாகனத்தால் அடிப்பட்டு தலையில் பலத்த காயம் அடைந்தான். அதனால் அவன் மூளை செயலிழந்து, இதயம் மட்டுமே இயங்கிக்கொண்டு இருந்தது.

* ஷிதேந்திரனின் இதயம் சிறுமிக்கு பொருத்தப் பட்டது. இதயம் இடம் மாறி நிலைத்து, தொடர்ந்து துடித்தது. சிறுமி உயிர் பிழைத்தாள். மனிதநேயத்தின் சாதனையாகத் தம் மகனின் துடிக்கும் இதயத்தையே கொடையாகத் தந்த அசோகன். புஷ்பாஞ்சலி என்ற மருத்துவ பெற்றோரையும், இதயம் கொடுத்து இதயங்களை வென்ற ஷிதேந்திரனையும் இவ்வுலகம் என்றென்றும் நினைவில் கொள்ளும்.